பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**01 05 2026** **12 40**

வெள்ளிக்கிழமை நண்பகல்

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** புத்த பூர்ணிமா இன்று கொண்டாடப்படுவதையொட்டி குடியரசுத்தலைவர், குடியரசு துணைத்தலைவர் பிரதமர் உள்ளிட்டோர் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

**2.** மத்திய அரசு டீசல் மற்றும் விமான எரிபொருள் மீதான ஏற்றுமதி வரியை குறைத்துள்ளது.

**3.** மும்பையில் ஆயிரத்து **745** கோடி ரூபாய் மதிப்பிலான கொக்கைன் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

**4.** சண்டைநிறுத்த அறிவிப்பிற்குப் பிறகு ஈரான் உடனான பிரச்சினைக்கு தற்காலிமாக தீர்வு காணப்பட்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

**5.** தாமஸ் கோப்பை பேட்மிண்டன் போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று சீன தைபே-ஐ எதிர்கொள்கிறது.

**...** இனி விரிவான செய்திகள் **...**

<<<<>>>>

கௌதம புத்தர் பிறந்த நாளைக் குறிக்கும் வகையிலும், புத்தர் ஞானம் பெற்ற நாளைக் குறிக்கும் வகையிலும் புத்த பூர்ணிமா இன்று கொண்டாடப்படுகிறது.

இந்தியா, நேபாளம், பூடான், இலங்கை போன்ற நாடுகளில் இது ஒரு முக்கிய பண்டிகையாக கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி குடியரசுத்தலைவர், குடியரசு துணைத்தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், புத்தரின் கருணை, அஹிம்சை, அமைதி, ஞானம் குறித்த போதனைகள் ஒட்டுமொத்த மனிதகுலத்திற்கு தொடர்ந்து வழிகாட்டும் என்று கூறியுள்ளார்.

புத்தரின் வாழ்க்கை, போதனைகள், நல்லிணக்கம், அகிம்சை, நேர்மையின் பாதையில் முன்னேற உத்வேகம் அளிக்கட்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வாழ்த்தியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், புத்தரின் போதனைகளை செயல்படுத்த அரசு உறுதிபூண்டிருப்பதாக கூறியுள்ளார்.

சமூகத்தில் மகிழ்ச்சி, நல்லிணக்கமும் பெருகட்டும் என்றும் அவர் வாழ்த்தியுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள செய்தியில், புத்தரின் வாழ்க்கை சமூக நலனுக்கு எடுத்துக்காட்டாக உள்ளதாக கூறியுள்ளார்.

<<<<>>>>

இதனிடையே புத்த பூர்ணிமாவையொட்டி, லடாக் - லே பகுதியில் உள்ள **JivaTsal-**ல் புத்தரின் புனித திருவுருவச் சின்னங்களின் கண்காட்சியை மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா திறந்து வைத்தார்.

இந்த கண்காட்சி வரும் **14**ஆம் தேதி வரை நடைபெறும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் லடாக் துணைநிலை ஆளுநர் திரு. வினய்குமார் சக்சேனா, புத்த மத துறவிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

<<<<>>>>

மகாராஷ்டிரா மாநில நிறுவன தினம் இன்று கொண்டாடப்படுவதையொட்டி குடியரசுத்தலைவர், குடியரசு துணைத்தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், சத்ரபதி சிவாஜியின் வீரம், தேசப்பற்று, தைரியம், சுயமரியாதைக்கு இம்மாநிலம் பெயர்போனதாக கூறியுள்ளார்.

மகாராஷ்டிராவை சேர்ந்த மாபெரும் தலைவர்களான மகாத்மா ஜோதிபா ஃபுலே, சாவித்ரி பாய் ஃபுலே, லோக்மான்ய பாலகங்காதர் திலக், டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கர் ஆகியோர் நாட்டு மக்களுக்கு உத்வேகம் அளித்து வருவதாக கூறினார்.

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் விடுத்துள்ள செய்தியில், கலாச்சாரம், கல்வி, பொதுசேவை, தொழில் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் நாட்டின் வளர்ச்சியில் மகாராஷ்டிராவின் பங்களிப்பு முக்கியமானது என்று தெரிவித்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்துள்ள செய்தியில், சமூக சீர்திருத்தம், கலாச்சாரம், கல்வி, அறிவியல், இலக்கியம் உள்ளிட்ட

பல்வேறு துறைகளில் மகாராஷ்டிரா முன்னோடி மாநிலமாக திகழ்வதாக கூறியுள்ளார்.

<<<<>>>>

உழைப்பாளர் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா வெளியிட்டுள்ள செய்தியில், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு தொழிலாளர்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாகத் தெரிவித்தார்.

மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வெளியிட்டுள்ள செய்தியில், சுயசார்பு மற்றும் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட உழைப்பாளர்களின் பங்களிப்பு இன்றியமையாதது என்று கூறியுள்ளார்.

மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள செய்தியில், நாட்டின் வளர்ச்சிக்கு தங்களது கடின உழைப்பை வழங்கி வரும் உழைப்பாளர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவிப்பதாக கூறினார்.

<<<<>>>>

போதைப்பொருள் தடுப்பு பிரிவு, மும்பையில் ஆயிரத்து **745** கோடி ரூபாய் மதிப்பிலான கொக்கைன் போதைப்பொருளை பறிமுதல் செய்துள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், **349** கிலோ உயர்தர கொக்கைன் கைப்பற்றப்பட்டுள்ளதாக கூறினார்.

போதைப்பொருள் புழக்கத்திற்கு எதிராக அரசு தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மத்திய அரசு டீசல் மற்றும் விமான எரிபொருள் மீதான ஏற்றுமதி வரியை குறைத்துள்ளது.

இதுகுறித்து மத்திய நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், டீசல் மீதான ஏற்றுமதி வரி லிட்டர் ஒன்றுக்கு **23** ரூபாயாகவும், விமான எரிபொருள் மீதான ஏற்றுமதி வரி லிட்டர் ஒன்றுக்கு **33** ரூபாயாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

பெட்ரோலுக்கு ஏற்றுமதி வரி ஏதும் விதிக்கப்படவில்லை.

பெட்ரோல், டீசல் மற்றும் விமான எரிபொருள் ஏற்றுமதி செய்வதற்கு கடந்த மார்ச் மாதம் 27ஆம் தேதியில் இருந்து கூடுதல் கலால் வரி விதிக்கப்பட்டிருந்தது.

மேற்காசிய பிரச்சினையை அடுத்து உள்நாட்டில் பெட்ரோலியப் பொருட்கள் தடையின்றி விநியோகிப்பதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

உள்நாட்டு விநியோகத்திற்கான பெட்ரோல், டீசல் மீதான கலால் வரியில் எந்த மாற்றமும் விதிக்கப்படவில்லை என்றும் நிதியமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

இதனிடையே பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும் பெட்ரோல், டீசல் விலையில் மாற்றம் எதுவும் இல்லை என்று இந்திய எண்ணெய்க் கழகம் தெரிவித்துள்ளது.

இந்த நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 33 கோடி நுகர்வோருக்கு வழங்கும் வீட்டு உபயோக சமையல் எரிவாயு சிலிண்டரின் விலையிலும் எந்த மாற்றமும் இல்லை என்று கூறியுள்ளது.

தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் எரிபொருட்களின் விலை சர்வதேச சந்தை மதிப்புக்கு ஏற்ப உயர்த்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<>>>

தமிழகத்தின் நீலகிரி மாவட்டத்தில் கோடை சீசன் தொடங்கியுள்ளதையடுத்து, இன்று முதல் போக்குவரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்தும் வகையில், சில பாதைகள் ஒரு வழிப்பாதையாக மாற்றப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte — Saravanan — 60 Sec)**

<<<>>>

மத்தியப்பிரதேச மாநிலம் ஜபல்பூர் மாவட்டம் **Khamaria** தீவு அருகே **Bargi** ஆற்றில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் **4** பேர் உயிரிழந்தனர்.

காணாமல்போன **11** பேரை தேடும் பணியில் மீட்புக் குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

இந்த விபத்தில் நீரில் மூழ்கிய **24** பேரை மீட்புக் குழுவினர் பாதுகாப்பாக மீட்டனர்.

மாநில பேரிடர் மீட்புப் படையினர், காவல்துறையினர் மீட்புப் பணியில் ஈடுபட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தலா **4** லட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்கப்படும் என்று முதலமைச்சர் டாக்டர் மோகன் யாதவ் அறிவித்துள்ளார்.

<<<<>>>>

மேற்காசியாவில் சண்டைநிறுத்த அறிவிப்பிற்குப் பிறகு ஈரான் உடனான பிரச்சினைக்கு தற்காலிமாக தீர்வு காணப்பட்டுள்ளதாக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் திரு. **Pete Hegseth** தெரிவித்துள்ளார்.

அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் இதனைத் தெரிவித்த அவர், கடந்த ஏப்ரல் மாதம் **7**ஆம் தேதி அறிவித்த சண்டை நிறுத்தத்திற்குப் பிறகு தாக்குதல் எதுவும் நடத்தப்படவில்லை என்று கூறினார்.

அமெரிக்க சட்டப்படி 60 நாள் ராணுவ நடவடிக்கைக்குப் பிறகு தாக்குதல் நடத்துவதற்கு நாடாளுமன்ற ஒப்புதல் பெற வேண்டும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ஹோர்முஸ் நீரிணை ஈரான் கட்டுப்பாட்டில் உள்ள போதிலும் ஈரான் கப்பல்களின் போக்குவரத்தை அமெரிக்கா தடை செய்து வருகிறது.

இந்நிலையில் ஈரான் மீதான ராணுவ நடவடிக்கைக்கு நாடாளுமன்ற அனுமதி பெற வேண்டும் என்று அமெரிக்க ஜனநாயக கட்சி உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

<<<<>>>>

தாமஸ் கோப்பை பேட்மிண்டன் போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று சீன தைபே-ஐ எதிர்கொள்கிறது.

டென்மார்க்கில் நடைபெறும் இப்போட்டி பிற்பகல் மணி 1.30க்கு தொடங்குகிறது.

---------------

லண்டனில் நடைபெற்று வரும் உலக டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியில் இந்தியா, ஆடவர் பிரிவில் - கௌதமாலாவையும், மகளிர் பிரிவில் ருவாண்டாவையும் வென்றது.

---------------

தில்லியில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஜென்சி - தீபக் பாய் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

---------------

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியின் இன்றைய ஆட்டத்தில் ராஜஸ்தான் அணி - தில்லி அணியை எதிர்கொள்கிறது.

ஜெய்ப்பூரில் நடைபெறும் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

**<<<<The End>>>>**